(இதனகத்துப்பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ''ஸ்ரீ நாத அகஸ்தான சர்வதேச புத்த தியான நிலைய செயலாற்றுகைச் சங்கம்'' என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும்; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்; அத்துடன் அது பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பி யாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவைகள் ஒழுங்கமைப்புக்கள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் நோக்கத்திற்காகவும் கருத்தெல்லைக்குள் வருகின்ற வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதிலும் மற்றும் அது தொடர்பிலும் ஏற்புடைய தாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) முத்திப்பேறுக்காக நால்வகைப் பிரிவினருக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்தல்;

(ஆ) புத்தசாசனத்தின் நிலைபேறான தன்மைக்காக செயற்படுதல்;

(இ) நிலையத்தின் காப்பு, பராமரிப்பு மற்றும் அதன் வளர்ச்சிக்காக செயலாற்றுதல்;

(ஈ) நிலையத்தில் தங்கியிருக்கும் பிக்குமார்கள், தசசீல மாதாக்கள், உபாசகர்கள் மற்றும் உபாசிகைகள் ஆகிய நால்வகைப் பிரிவினருக்கு காவியுடை, பிச்சை ஏந்துதல் (மாமிசக் கலப்பற்ற), துறவர் மடம் மற்றும் பான வகைகளை ஏற்பாடுசெய்தல்;

